# தரம் 3,4 நிலையுறி பரீட்சைப் புள்ளிகளை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் EMIS (www.edudept.np.gov.lk) இணைய தரவுத்தளத்தில்

## <u>பதிவேற்றம் செய்வதற்கான வழிகாட்டி</u>

1. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (www.edudept.np.gov.lk) இணைய தரவுத்தளத்தின் முகப்புப் பக்கத்திலுள்ள பாடசாலைகளுக்குரிய உள்நுழைவுப் பகுதியில் சொடுக்கவும். (உரு 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு)




(உரு 1)

2. பின்னர் தங்களிற்கு கீழ்க்காட்டப்பட்ட உரு 2 தோன்றும். இத்திரையில் தங்கள் பாடசாலைக்குரிய பயனர் பெயரையும், கடவுச்சொல்லையும் தட்டச்சுச் செய்து "Login" பொத்தானை அழுத்தவும்.




(உரு 2)

3. பின்னர் தங்களிற்கு கீழ்க்காட்டப்பட்ட உரு 3 தோன்றும்.




(உரு 3)

இத்திரையில் கீழ்நோக்கிச் சென்றால் கீழ்க்காட்டப்பட்டுள்ள உரு 4 தோன்றும்.




(உரு 4)

அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ள 'Grade 4' பொத்தானை அழுத்தவும்.

4. அப்போது தங்கள் கணினித்திரையில் கீழ்க்காட்டப்பட்டுள்ள உரு 5 தோன்றும்.




| SNo | StudID | StudName | Year | Grade | Div | last updated date | Actions |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 091320000301 | | 2016 | 4 | A | 0000-00-00 | Marks |
| 2 | 091320000302 | | 2016 | 4 | A | 0000-00-00 | Marks |
| 3 | 091320000303 | | 2016 | 4 | A | 0000-00-00 | Marks |
| 4 | 091320000304 | | 2016 | 4 | A | 0000-00-00 | Marks |
| 5 | 091320000305 | | 2016 | 4 | A | 0000-00-00 | Marks |
| 6 | 091320002772 | | 2016 | 4 | A | 2016-09-19 | Marks |
| 7 | 091320002773 | | 2016 | 4 | A | 2016-09-19 | Marks |
| 8 | 091320002781 | | 2016 | 4 | A | 2016-09-19 | Marks |

(உரு 5)

இவ்வுருவில் தங்கள் பாடசாலையில் தரம் 4 இல் கல்விகற்கின்ற மாணவர்களின் விபரங்கள் தோன்றும்.

மேற்படி உருவில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் எதிரேயுள்ள 'Marks' எனும் இணைப்பில் சொடுக்கும்போது, குறித்த மாணவனிற்குரிய பரீட்சைப் புள்ளிகளைப் பதிவதற்குரிய பகுதி (உரு 6) கணினித்திரையில் தோன்றும்.




(உரு 6)

மேற்படி உருவில் 'Add New' பொத்தானை அழுத்தவும். அப்போது கணினித்திரையில் உரு 7 தோன்றும்.




(உரு 7)

மேற்படி உரு 7 இல்

- FirstLanguage கூட்டினுள் குறித்த மாணவன் தாய்மொழிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளியைப் பதிவுசெய்யவும். மாணவன்/ மாணவி பரீட்சைக்குத் தோற்றவில்லையாயின் 999 எனப்பதிவுசெய்யவும்.
- Mathematics கூட்டினுள் குறித்த மாணவன் கணிதபாடப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளியைப் பதிவுசெய்யவும். மாணவன்/ மாணவி பரீட்சைக்குத் தோற்றவில்லையாயின் 999 எனப்பதிவுசெய்யவும்.
- Env கூட்டினுள் குறித்த மாணவன் சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளியைப் பதிவுசெய்யவும். மாணவன்/ மாணவி பரீட்சைக்குத் தோற்றவில்லையாயின் 999 எனப்பதிவுசெய்யவும்.

மூன்று பாடப்புள்ளிகளும் சரியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தியபின் 'Save' பொத்தானை அழுத்தவும்.

இதேபோல் ஏனைய மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகளையும் பதிவுசெய்யவும்.

5. தங்களால் பதிவுசெய்யப்பட்ட பரீட்சைப் புள்ளிகளில் ஏதேனும் தவறுகளை தாங்கள் அவதானித்தால், உரு5 இல் காட்டியவாறு குறித்த மாணவனிற்கு எதிரேயுள்ள 'Marks' இணைப்பில் அழுத்தவும். அப்போது கணினித்திரையில் கீழ்க்காட்டப்பட்டுள்ள உரு 8 தோன்றும்.




(உரு 8)

மேற்படி உருவில் 'Edit' பொத்தானை அழுத்தினால் கீழ்க்காட்டப்பட்டதுபோல் உரு 9 தோன்றும்.




(உரு 10)

மேற்படி உரு 10 இல் காட்டப்பட்டுள்ளதுபோல் தங்கள் கணினித்திரையில் தோன்றும் உருவில் தாங்கள் தவறுதலாகப் பதிவுசெய்த புள்ளியைத் திருத்தம் செய்தபின் 'Save' பொத்தானை அழுத்தினால் தங்களால் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தரவுத்தளத்தில் பதியப்படும்.